# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

---

*(2002 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

2002, திசெம்பர் மாதம் 13 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.75 தபாற் செலவு : ரூபா 4.50

## 2002 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. — ஓ. 41/2002
4704

## 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம் 1 இன் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம், அச்சட்டத்தின் (துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு) பாகம் 1 இன் 2 ஆம் பிரிவில் "விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும் :

எவ்வாறாயினும், செயன்முறைக்குட்படுத்தி மீள் ஏற்றுமதி செய்யப்படும் நோக்கத்திற்காக இலங்கையினுள் இறக்குமதி செய்யப்பட்ட பொருளொன்றின் விடயத்தில், அப்பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி, கப்பற் கட்டணப் பெறுமதி என்பவற்றின் மீது 0.75 சதவீதம் விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

3. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2002 மே 1 ஆம் திகதி முதல் பயனுறுவதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.